பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 29 ஞாயிற்றுக்கிழமை (10-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 14

# வன்னியில் புனர்வாழ்வு திட்டங்கள்: விடுதலைப் புலிகள் துரித ஏற்பாடு!

## பல பிரிவுகளும் மும்முரப் பணி

சாவகச்சேரி, டிசம்பர். 10

குடாநாட்டிலிருந்து வன்னிக்கு இடம் பெயர்ந்து செல்லும் மக்களின் வாழ்வுக்குத் தேவையான ஆதாரங்களைத் துரிதமாக உருவாக்கிக் கொடுக்கும் அவசர புனர்வாழ்வுப் பணியில் விடுதலைப் புலிகளின் பல்வேறு பிரிவுகளும் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றன;

ஸ்ரீலங்காப் படைகள் வலிகாமத்தில் மேற்கொண்ட ''சூரியப் பிரகாசம்'' படையெடுப்பின் முதலாம் கட்டம் காரணமாகவும்—

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதி மீது நடாத்தத் திட்டமிடப்படும் அதன் உத்தேச அடுத்த கட்டப் படையெடுப்பை எதிர்பார்த்து பாதுகாப்பு முன்னேற்பாடாகவும்—

குடாநாட்டில் இருந்து இலட்சக் கணக்கான மக்கள் வன்னிப் பகுதிக்குள் மிக வேக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பஸ்ஸிலிருந்து தப்பி ஓட முயன்ற பயணிகளையே படையினர் சுட்டனர்!

### மட்டு. புதுக்குடியிருப்பு சம்பவம் குறித்து தகவல்

கொழும்பு, டிச. 10

தாக்குதலுக்கு இலக்கான மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு அதிரடிப்படை முகாமுக்கு சற்றுத் தூரத்துக்கு அப்பால் நிறுத்தப்பட்டிருந்த பஸ்ஸில் இருந்த அப்பாவிப் பயணிகள் பஸ்ஸிலிருந்து தப்பி ஓட முயற்சித்தபோதே படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், மட்டக்களப்பு புதுக்குடியிருப்புப் பகுதியில் கடந்த செவ்வாயன்று அப்பாவித் தமிழர்கள் முப்பது பேர் படையினரால் கொல்லப்பட்டது குறித்து செய்தி ஏஜென்ஸி ஒன்றுக்கு தகவல் வெளியிடுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கிழக்கில் அண்மைக் காலத்தில் ஆங்காங்கே பழிவாங்கும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

( ஆம் பக்கம் பார்க்க)

### படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 30 தமிழரில் 17 பேரின் சடலங்களே ஒப்படைப்பு

கொழும்பு, டிச. 10

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு அதிரடிப்படை முகாம் மீதான தாக்குதலின் பின்னர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்கள் முப்பது பேரில் 17 பேரின் சடலங்கயே — இரண்டு நாட்களின் பின்னர் — மிகவும் பழுதடைந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வான் மீது சூடு! எதிரணி எம்.பி. அருந்தப்பு!!

கொழும்பு, டிச. 10

வெலிகந்தவுக்கு அருகே ஏறாவூர் வீதியில் சென்று கொண்டிருந்த வான் ஒன்றின் மீது திடீர்த் தாக்குதல் நடத்தப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த வானில் பயணம் செய்த ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன ஆபத்தின்றி உயிர் தப்பியுள்ளார்.

வானில் சென்ற வேறு சிலர் காயமடைந்னர். வானுக்கு பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது.

(ஐ-6)

## 'சார்க்' போட்டிகளில் பங்குபற்ற இலங்கை விளையாட்டு வீரர் குழு சென்னை வருவதை தடை செய்க!

### மத்திய, மாநில அரசுகளிடம் கோபாலசாமி கோரிக்கை

சென்னை, டிச. 10

சென்னையில் எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள சார்க் நாடுகளின் விளையாட்டு விழாவில் இலங்கை அணியினர் கலந்து கொள்ளத் தடை விதிக்குக.

இவ்வாறு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் இந்திய மத்திய அரசிடமும், தமிழக அரசிடமும் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் தனித்தனியான அறிக்கைகளை அனுப்பியுள்ளார்.

இலங்கையில் தமிழர்களைப் படுகொலை செய்து வரும்



வை. கோபாலசாமி

இராணுவ நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இலங்கை அணியினர் சென்னை வரத் தடை விதிக்குமாறு அதில் கோரப்பட்டிருக்கிறது.

சார்க் விளையாட்டு விழாவில் இலங்கை அணி கலந்து [illegible] தெரிவித்து சென்னையில் கறுப்புக் கொடிகளைக் காட்டி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் ம.தி.மு.க. திட்டமிட்டிருக்கிறது.

இலங்கை விளையாட்டுக் குழுவினர் சென்னைக்கு வர அனுமதிக்கப்பட்டால் விளையாட்டு விழா நடைபெறவுள்ள அரங்கினுள் நுழைந்து

(6 ஆம் பக்கம் பார்க்க

### சென். பற்றிக்ஸ் அருகே படையினர்மீது புலிகள் சூடு!

கொழும்பு. டிச. 10

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு அருகே நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் படையினர் இருவர் காயமடைந்தனர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இச்சம்பவத்தை அடுத்து படையினர் அப்பகுதியைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர் என்று அறிவிக்கப்பட்டது.

காயமடைந்த இரு படையினரும் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

(உ-ஐ)

### வலிகாமத்தில் இடம் பெறும் புலிகளின் தாக்குதல்களால் அரசுக்கு புதிய நெருக்கடி

சாவகச்சேரி, டிச. 10

வலிகாமத்திலிருந்து விடுதலைப் புலிகள் முற்றாக வெளியேற்றப்பட்டு விட்டதாக ஸ்ரீலங்கா அரசாங்கம் பிரசாரம் மேற்கொண்டு வரும் வேளையில் அங்கு இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் அடிக்கடி தாக்குதலை நடத்திவருவது படையினருக்கு புதியதொரு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாக 'புலிகளின்குரல்' வானொலி தெரிவித்தது.

புலிகளின் இத்தகைய தாக்குதல்கள் இராணுவ வட்டாரங்களில் குழப்ப நிலைமை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### மூவாயிரம் பேர் மட்டுமே வலிகாமத்தில் மிஞ்சினர்!

#### ஜனாதிபதி சந்திரிகா தகவல்

கொழும்பு, டிச. 10

படையினர் கைப்பற்றியுள்ள வலிகாமம் பகுதியில் 3 ஆயிரம் பொதுமக்கள் இருப்பதாக எமது மதிப்பீடுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

— இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

எமது படையினர் அங்கு எஞ்சியுள்ள இந்த மக்களை நன்கு நடத்துகின்றார்கள். அவர்களின் சொத்துக்களை எமது படையினர் தொடவில்லை; அவர்களின் கோழிகளைப் பிடித்துத் தின்னவில்லை.

கோழிகளும், ஆடுகளும் அங்கே இன்னும் ஓடித் திரிகின்றன. அமைச்சர் அனுருத்த ரத்வத்த அதனை நேரில் பார்த்துள்ளார் — இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா மேலும் குறிப்பிட்டார்

இந்த பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் அனுருத்த ரத்வத்தை உட்பட பல அமைச்சர்கள் பங்குபற்றினர் என்பது தெரிந்ததே.

(உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளாலி ஊடாக தினமும் 4 ஆயிரம் பேர் பயணம்!

எழுதுமட்டுவாள், டிச.10

வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சி வடமராட்சி பகுதிகளில் குடியமர்ந்துள்ள மக்களை வன்னிப் பிரதேசத்தில் சென்று குடியேறுமாறு விடுதலைப் புலிகளால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று பெருமளவிலான மக்கள் தினமும் கிளாலி நோக்கிச் செல்கின்றனர்.

வன்னிப் பகுதிக்கு தினமும் நாலாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கிளாலியூடாகப் பயணம் செய்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வன்னிக்கு செல்லும் மக்களின் நன்மைகருதி விடுதலைப் புலிகள் தினமும் பஸ் சேவைகளை இலவசமாக நடத்தி வருகின்றனர்.

வன்னி செல்லும் மக்களின் இருப்பிடங்களைத் தேடிச் சென்று வேண்டிய போக்குவரத்து வசதிகளையும் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றனர்.

வன்னிக்குச் செல்வோர் குடிசைகள் அமைக்கக் கூடிய மரங்கள் ஏனைய பொருள்களைக்கொண்டுசெல்ல விரும்பினால் அதற்கும் ஒழுங்கு செய்து தரப்படும் எனவும் இலவச போக்குவரத்து வசதி கிளாலி வரையும் வழங்கப்படுவதோடு —

கிளாலி படகு சேவையும் இலவசமாக நடத்தப்படுவதாக — மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் விடுதலைப் புலிகள் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து வருகின்றனர்.

இதேவேளை —

கடந்த மாதத்தில் கிளாலியூடாக இரண்டு லட்சத்துக்கும் கூடுதலான மக்கள் வன்னிப்பகுதிக்கு சென்றுள்ளனர்.

அங்கு அவர்கள் முகாம்களிலும், வீடுகள் அமைத்தும் தம் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ளனர்.

மக்களில் பெரும்பாலானோர் விவசாய நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்தி வருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ-152)

## மீனவர் விவகாரம் குறித்து

# இந்தியாவுடன் பேச்சுநடத்த இலங்கை குழு செல்லும்

கொழும்பு, டிச. 10

இந்தியக் கடற் பிராந்தியத்தில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்களை விடுதலை செய்வது பற்றி இந்திய அதிகாரிகளுடன் பேச்சு நடத்த இலங்கைக்குழு ஒன்று அடுத்தவாரம் இந்தியா செல்லவிருக்கிறது.

பிரதி கடற்றொழில் அமைச்சரின் செயலாளரான வசந்த ஹேரத் தலைமையிலான குழுவே அடுத்தவாரம் இந்தியா செல்லும்.

இந்தியக் கடற்பிராந்தியத்தில் மீன்பிடித்த 85 இலங்கை மீனவர்களை இந்தியக் கரையோரப்படையினர் இதுவரை கைது செய்துள்ளனர்.

29 மீன்பிடிப்படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தியக் கடற்பிராந்தியத்தில் மேலும் 15 இலங்கை மீன்பிடிக் கப்பல்களும், பல மீனவர்களும், காணாமற் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தெற்கு மற்றும் கிழக்கு கரையோரத்தில் இருந்து 200 கடல் மைல் பிரதேசத்தில் இலங்கை மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு எதுவித தடையும் இல்லை என்றுகடற்தொழில் அமைச்சு கூறியுள்ளது. (ஐ-3)

## சாவகச்சேரி நகரப் பகுதியில்

# பொது இடங்களில் தங்கியிருந்தோர் வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்

சாவகச்சேரி, டிச. 10

சாவகச்சேரி நகரப் பகுதியில் பொது இடங்களில் நெருக்கமாகத் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்கள் வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

மக்கள் நெருக்கமாக தங்கியிருந்ததால் ஏற்பட்ட சுகாதாரச் சீர்கேட்டைத் தவிர்க்கும் நோக்கிலேயே அதிக எண்ணிக்கையான மக்கள் வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி நகரில் சந்தைப் பகுதி, பாடசாலைகள், கோவில்கள் மற்றும் பொது இடங்களில் தங்கியிருந்த இடம்பெயர்ந்த மக்களே பளை, கச்சாய் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களில் பலரும் தாமாகவே முன்வந்து வன்னிப் பகுதிக்கும் சென்றுள்ளனர்.

மக்கள் மிகவும் நெரிசலாக தங்கியிருப்பதால் சாவகச்சேரி நகரப் பகுதியில் வயிற்றோட்டம் மற்றும் பல தொற்று நோய்கள் தீவிரமாகப் பரவியுள்ளமை தெரிந்ததே. (ஐ-7)

# கிளாலி இறங்குதுறையில் முடிச்சு மாறிகள் கைவரிசை

எழுதுமட்டுவாள், டிச. 10

கிளாலி இறங்குதுறையில் மக்கள் கூட்டம் அதிகரித்துள்ள இவ்வேளையில் முடிச்சுமாறிகளும் தம் கைவரிசைகளைக் காட்டி வருகின்றனர்.

வன்னிக்குச் செல்லும் மக்கள் கிளாலி இறங்குதுறையில் தம் பொருள்களுடன் காத்திருக்கும் வேளையில் —

இரவு நேரங்களில் முடிச்சு மாறிகள் மக்களோடு மக்களாக தாமும் பயணிகளைப் போல் பாவனைசெய்து பெறுமதி வாய்ந்த பல பொருள்களை அபகரித்துச் சென்று விடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பெறுமதிவாய்ந்த பொருள்களைப் பறிகொடுத்த பலர் இது பற்றி முறைப்பாடுகளைச் செய்துள்ளனர். (ஐ-152)

# பத்து தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் நாளை ஜனாதிபதியுடன் சந்திப்பு

## யுத்த நிறுத்தம் ஒன்றைக் கோருவராம்

கொழும்பு, டிச. 10

கொழும்பில் இயங்கும் பத்து தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் நாளை மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்திக்கும்போது யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறு அவரிடம் கோருவர் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

நாளை மாலை 4.00 மணிக்கு அலரி மாளிகையில் இச்சந்திப்பு இடம்பெறவிருக்கின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஈழ மக்கள் ஜனநாயக முன்னணி, ஈ. பி. ஆர். எல். எவ்., புளொட், ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி, தேசிய தொழிலாளர் சங்கம் ஆகிய பத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளே ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு கோரி ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்திருந்தனர்.

கடந்த நவம்பர் 14 ஆம் திகதி இச்சந்திப்புக்கு ஜனாதிபதி நேரம் ஒதுக்கியிருந்தார் என்பதும் —

பின்னர் காலவரையறை குறிப்பிடாமல் இச்சந்திப்புக்கான திகதியை ஜனாதிபதி சந்திரிகா ஒத்திவைத்திருந்தார் என்பதும் தெரிந்ததே. (உ)

# பலாலியில் இருந்து 20 பேர் இன்று விடுவிக்கப்படுவர்

சாவகச்சேரி, டிச. 10

படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 20 பேர் பலாலியில் இருந்து இன்று விடுதலை செய்யப்படவிருக்கின்றனர்.

இவர்களை நேற்று விடுதலை செய்ய இராணுவத்தினர் முன்வந்ததையடுத்து—

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் நேற்று முன்தினம் பலாலிக்கு ''ஹபரண'' கப்பலில் சென்றிருந்தனர். ஆனால் அவர்களை விடுதலை செய்வதில் ஏற்பட்ட சில தடங்கல்கள் காரணமாக இன்று அவர்களை விடுதலை செய்வதாகப்படையினர் தெரிவித்ததாகவும்—

இன்று அவர்கள் விடுதலை செய்யப்பட்டு ''ஹபரண'' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு அழைத்து வரப்படுவர் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-173)

# உளவியல் பாதிப்பு குறித்து றெட்பானா ஆய்வு செய்யும்

சாவகச்சேரி, டிச. 10

யுத்தத்தினால் உளவியல் தாக்கத்துக்குள்ளாகும் சிறுவர்கள் குறித்து ஆய்வுஒன்றை ரெட்பானா நிறுவனம் மேற்கொள்ளவிருக்கிறது.

யுத்தம் காரணமாக உளவியல் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ள சிறுவயதினர் எதிர்காலத்தில் சந்திக்கப்போகும் பாதிப்புக்கள் குறித்தும்—

அந்தப் பாதிப்புக்களை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்பது குறித்தும்— இங்கு வந்துள்ள ரெட்பானா அமைப்பின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி தோர்ஸ் ரெக்னி ஆராய்ந்துள்ளார்.

தென்மராட்சிப் பகுதியில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கு அவர் நேரில் சென்று சிறுவர்கள் நிலை பற்றிக் கேட்டறிந்தார்.

யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதனுடனும் அவர் பேச்சு நடத்தினார். (ஐ-3)

## துறைமுக ஊழியர் காயம்

கரணவாய், டிச. 10

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலில் இருந்துபொருள்களை இறக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவர் மூடை ஒன்றுடன் நெரியுண்டு வயிற்றில் படுகாயமடைந்தார்.

பொலிகண்டியைச் சேர்ந்த ந. இளஞ்சந்திரன் (வயது 38) என்பவரே இழுவைப்படகினுள் மூடைகளை இறக்கியபோது படுகாயமடைந்தார். (ஐ-80)

## நாளை முதல் தோல் கிளினிக்

வடமராட்சி, டிச. 10

யாழ். போதனா வைத்தியசாலையின் சரும வியாதிக் கிளினிக் நாளை ஆரம்பிக்கப்படவுள்ளது.

மந்திகையில் இந்த வைத்தியசாலை செயற்படத் தொடங்கியதை அடுத்து ஏற்கனவே பொது வைத்தியம், பல், கண் ஆகிய கிளினிக்குகள் அங்கு ஆரம்பிக்கப்பட்டன.

மற்றைய கிளினிக்குகளும் விரைவில் ஆரம்பிக்கப்படும் என யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளினிக்குகள் யாவும் மந்திகையி[illegible] [illegible] நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (உ-178)

## போலியோ தடுப்பு மருந்து வழங்கும்

# 2ஆவது கட்டப் பணி வெற்றிகரமாகப் பூர்த்தி

சாவகச்சேரி, டிச. 10

இந்த நூற்றாண்டுக்கு முன்னர் போலியோவை (இளம்பிள்ளை வாதத்தை) உலகில் இருந்து முற்றாக ஒழித்துவிடுவது என்ற சர்வதேச றோட்டறியினது திட்டத்தின் கீழ் —

ஐந்து வயதுக்குட்பட்ட சகல குழந்தைகளுக்கும் போலியோ நோய்த் தடுப்புச் சொட்டு மருந்தை ஒரேநாளில் வழங்கும் பணி யாழ். மாவட்டத்தில் நேற்று இரண்டாவது கட்டமாக வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் இதற்கென அமைக்கப்பட்ட நிலையங்களில் நேற்றுப் பகல் முழுவதும் பல்லாயிரக்கணக்கான சிறார்களுக்கு போலியோத் தடுப்பு சொட்டு மருந்து வழங்கப்பட்டது.

இடம்பெயர்ந்தவர்கள் உட்பட சகல பெற்றோர்களும் ஐந்து வயதுக்குட்பட்ட தங்கள் பிள்ளைகளை அழைத்துச் சென்று போலியோ மருந்தைப் பெற்றுக் கொடுப்பதில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

நூற்றுக்கு மேற்பட்ட நிலையங்களில் இந்த போலியோ மருந்தை வழங்கும் பணியில் பெரும் எண்ணிக்கையான சுகாதாரப்பகுதித் தொண்டர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

இரண்டாவது கட்ட போலியோத் தடுப்பு மருந்தை வழங்கும் அங்குரார்ப்பணவைபவம் நேற்றுக் காலை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றது.

போலியோத் தடுப்பு மருந்தை வழங்கும் சர்வதேச ரீதியான இந்தத் திட்டத்தின்படி இந்தியா உட்பட சில நாடுகளில் நேற்று முதலாவது கட்டமாக இப்பணி மேற்கொள்ளப்பட்டது.

உலகில் போலியோவினால் பாதிக்கப்படுவோரில் 50 சதவீதத்தினரைக் கொண்ட இந்தியாவில் நேற்று 20 லட்சம் நிலையங்களில்வைத்து சுமார் ஏழு கோடி சிறுவர்களுக்கு போலியோத் தடுப்பு சொட்டு மருந்து வழங்கப்பட்டது. (ஐ-3)


## 1995/96 விதை உருளைக் கிழங்கு முற்பணம் மீளப் பெறல்

1995/96 காலபோகத்தில் விதை உருளைக் கிழங்கு பெறுவதற்காக பசுமை வேளாண் சேவையில் முற்பணம் செலுத்தியோர் தமது முற்பணத்தினை 20-12-1995 ற்கு முன்னர் புத்தூர்ச் சந்தி மீசாலையில் அமைந்துள்ள பசுமை வேளாண் சேவை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (39614)



## ஜெனறேற்றர் தேவை

1000 W இல் இருந்து 2000 W ற்குள் தேவை.
விலை விவரத்துடன் உடன் தொடர்புகொள்ளவும்.

கே. நடராசா
மதுபானச் சாலை,
பிரதான வீதி, சாவகச்சேரி.
[எரிபொருள் நிலையத்துக்கு அருகாமை] (39487)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் அடையாள 'கார்ட்' பெற வேண்டும்

## கைப்பற்றிய பகுதிகளில் படையினர் கெடுபிடி

கொழும்பு, டிச. 10

யாழ்ப்பாணத்தில் படையினர் கைப்பற்றிய இடங்களில் 10 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சரும் வடக்கு புனரமைப்புக்கான செயலணித் தலைவருமான நிமால் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

வடபகுதியில் விடுவிக்கப்பட்ட இடங்களில் புனர் வாழ்வை ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அரசாங்க அதிகாரிகள் இந்தப் பகுதிகளுக்கு விஜயம் செய்து தமது சேவைகளை ஆரம்பிப்பர்.

இந்தப் புனர்வாழ்வுப் பணிக்கு உதவ ஜப்பானும், ஐரோப்பிய நாடுகளும் விருப்பம் தெரிவித்துள்ளன.

உணவு, மருந்து, உடை என்பன வடக்கே அனுப்பப்பட்டுள்ளன.

அழிந்த கட்டடங்களைப் புனரமைப்புச் செய்ய கட்டடப் பொருள்கள் இலவசமாக வழங்கப்படும். — என்றும் அமைச்சர் நிமால் மேலும் தெரிவித்தார். (ஐ)

## நல்லூர் கோட்ட அதிபர்கள் கூட்டம்

நல்லூர் கோட்டபாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கள் முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறஉள்ளதாக நல்லூர் பிரதிக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார் (ஐ-7)

## மாஹோவில் சவர்க்காரம்

அடுத்த வாரம் பருத்தித்துறை வரவுள்ள ''லங்கா முடித' கப்பலைத் தொடர்ந்து 'மாஹோ' கப்பலும் வரவுள்ளது.

இக்கப்பலில் 50 மெற்றிக் தொன் சவர்க்கார வகைகளும் எடுத்துவரப்படும்.

இவ்வாறு எடுத்துவரப்படும் சவர்க்காரம் பங்கீட்டு அடிப்படையில் பாவனையாளருக்கு வழங்கப்படும் என்று தெரியவருகிறது. (இ-7)

## அச்சுவேலி ப.நோ.கூ. சங்கத்தின் தற்காலிக ஊழியர்கள் 26 பேர் இடை நிறுத்தம்!

மட்டுவில் வடக்கு, டிச. 10

சரசாலையில் இடம்பெயர்ந்து இயங்கிவரும் அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஏற்பட்டுள்ள நிதிப்பற்றாக்குறையினால் அங்கு கடமையாற்றிய 26 தற்காலிக ஊழியர்கள் இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினர் முன்னர் மேற்கொண்ட ''இடிமுழக்கம்'' இராணுவ நடவடிக்கையின் போது இச்சங்கத்திற்கு ஒன்றரைக்கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டது.

முன்னர் அச்சுவேலியில் இச்சங்கம் செயற்பட்டபோது 34 கிளைகள் இயங்கி வந்தன என்றும், தற்போது இடம்பெயர்ந்த பின்னர் 14 கிளைகளே இயங்கி வருவதாகவும், வியாபார சுழற்சி மிகவும் குறைவடைந்து சங்க வருமானம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் தற்காலிக ஊழியர்களாக இச்சங்கத்தில் பணியாற்றி வந்த 26 பேர் தற்காலிகமாக இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் திரு. க. பேரின்பநாயகம் தெரிவித்தார். (ஐ-135)

## திருமலையில் 20 தமிழர் கைது

கொழும்பு, டிச.10

கடந்த வார இறுதியில் திருகோணமலை நகரப் பகுதியில் சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் இருபது தமிழ் இளைஞர்களைக் கைது செய்து விசாரணைக்கு கொண்டு சென்றதாகத் தெரியவருகின்றது. (உ-3)

## 100 ரூபாவுக்கு பொருள்கள் வாங்கினால் 1 கிலோ சீனி

### சில கூ.சங்கங்களில் புதிய நடைமுறை

கோயில் குடியிருப்பு, டிச. 10

நூறு ரூபாவுக்கு பொருள்களை வாங்குபவருக்கு ஒரு கிலோ சீனி 48 ரூபாவுக்குக் கிடைக்கும்.

சில ப. நோ. கூ. சங்ககளில் தற்போது இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது.

வெளிச்சந்தையில் சீனிக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. சில இடங்களில் கிலோ நூறு ரூபாய் வரை விற்பனையாகிறது.

சில ப. நோ. கூ. சங்கங்கள் தமது பாவனையாளர்களுக்கு சீனியை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கி வருகின்றன.

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான இரு வார உலர் உணவு நிவாரணத்துக்கு தற்சமயம் சீனியும் வழங்கப்பட்டு வருவதால் வெளிச் சந்தைகளில் சீனியின் விலை வெகுவாகச் சரியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-30)

## இடம்பெயர்ந்தோருக்கு கனேடிய அரசு உதவி

கொழும்பு, டிச. 10

ஸ்ரீலங்காவின் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவ கனேடிய அரசாங்கம் கனேடிய கெயர் அமைப்பு மூலம் 3 லட்சத்து 50 ஆயிரம் கனேடிய டொலரை அன்பளிப்பாக வழங்கி உள்ளது.

இத்துடன் கனேடிய அரசாங்கம் இந்த வருடம் 17 லட்சத்து 9 ஆயிரம் ரூபாவை மனிதாபிமான அடிப்படையில் நிவாரணப் பணிகளுக்காக ஸ்ரீலங்கா அரசுக்கு வழங்கி உள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் நேரடியாகச் சென்றடைவதை உறுதிப்படுத்துவதில் கெயர் உட்பட அரச சார்பற்ற நிறுவனங்கள் ஸ்ரீலங்கா அரசுடன் ஒத்துழைப்பதாகவும் கனேடிய அரசு தெரிவித்துள்ளது.

கெயர் நிறுவனம் 1956 ஆம் ஆண்டு முதல் ஸ்ரீலங்காவில் இயங்கி வருகிறது.

1985 ஆம் ஆண்டு முதல் அது வடக்கில் நிவாரண வேலைகளில் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டு வருகிறது. (இ)

## திக்கம் வடிசாலை இடமாற்றம்

கோவில் குடியிருப்பு, டிச. 10

திக்கம் வடி சாலையில் பிரதான பிரிவுகள் வரணிக்கு இடம் மாற்றப்படுகின்றன.

வடமராட்சியின் கரையோரப் பகுதிகள் மீது படையினர் அடிக்கடி ஷெல் வீச்சுக்களை நடத்தி வருவதை அடுத்தே பாதுகாப்புக் கருதி இந் நடவடிகைமேற்கொள்ளப்பட்டிருக்கிறது. (ஐ-30)

## தமிழர் தேசம் எழுக! படை நடத்த வருக!

எழுக! எழுக, தமிழர் தேசம்
எழுக, எழுகவே.
வருக! வருக, படை நடத்த
வருக, வருகவே.

அழுகுமேனி அன்னைபூமி அழியவிடுவதோ?
அனலிலெங்கள் தமிழர்தேசம் எரியவிடுவதோ?
நிலவு பார்த்த ஊரைவிட்டு விழுந்து படுப்பதோ?
நீசர்வந்து நிலையெடுக்கப் பயந்து கிடப்பதோ?
உலகமெங்கும் அகதியாகி அலைந்து திரிவதோ?
உரிமையற்று அடிமையாகிச் சுகங்கள் முறிவதோ?
இழவுவீடு போலநம்மண் இடிந்து வீழ்வதோ?
இனியுமெங்கள் உயிரையெண்ணிக் கலங்கி
வாழ்வதோ?

எழுக! எழுக, தமிழர் தேசம்
எழுக, எழுகவே.
வருக! வருக, படை நடத்த
வருக, வருகவே.

பழிசுமந்து, அயல்துறந்து விழி கலங்கிடும்.
பயிர் வளர்த்த வயலிழந்து உயிர்நடுங்கிடும்.
பொலிவிழந்து, தமிழுடல்கள் மழைநனைந்திடும்.
பூசையான கோயிலெங்கும் பகை இருந்திடும்.
நலிவடைந்து, நடைதளர்ந்து உடல் நடந்திடும்.
நாளையென்ன செய்வதென்று துயர்குடைந்திடும்.
புலிநடத்தும் படைமுகத்தில் உமையிணைத்துமே
புதியதான தமிழராக வழி நடக்கவே.

எழுக! எழுக, தமிழர் தேசம்
எழுக, எழுகவே.
வருக! வருக, படை நடத்த
வருக, வருகவே.

கோட்டையேறி நின்றுகொண்டு பகைசிரித்ததாம்.
''கோவணாண்டி'' கொடியுயர்த்திக்
கொழும்பு சென்றதாம்.
ஆட்டை, மாட்டை ஆளவென்று
வந்து நிற்குதாம்.
அடதமிழா! இனியுறங்கிற் பெரிய வெட்கமாம்.
மூட்டைகட்டி எங்குசென்று வாழ எண்ணுறாய்?
மூன்று வேளை அகதியென்று சோறு தின்னுறாய்.
ஓட்டை வாழ்வில் ஒன்றுமில்லை உடன்
நிமிர்ந்துமே
உன்னை வேங்கைப் படையொருவன்
என நினைந்துமே.

எழுக! எழுக, தமிழர் தேசம்
எழுக, எழுகவே
வருக, வருக படை நடத்த
வருக, வருகவே.

— புதுவை இரத்தினதுரை

## வடக்குக்கான விநியோகத்துக்கு கடல் மார்க்கத்தையே நம்பும் நிலை

### பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாக அதிகாரி தகவல்

கொழும்பு, டிச. 10

வடபகுதிக்கு எல்லா பொருள்களும் கடல் மார்க்கமாகவே அனுப்பப்படவேண்டி இருப்பதால் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி உள்ளது.

—வடபகுதி புனருத்தாரண செயலணியின் செயலாளரும், இனவிவகார தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் மேலதிக செயலாளருமான எஸ். எம். ஜே. செனவிரத்னா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு முன்னர் சமாதானப் பேச்சுக்களின் போது உறுதியளித்திருந்த கோடிக்கணக்கான ரூபா பணத்தைச் செலவு செய்ய அரசாங்கம் தயாராய் உள்ளது.

பெரும்பாலான வீடுகள் பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், பல்கலைக் கழகம் என்பன நல்ல நிலையில் உள்ளன. இந்தக் கட்டடங்கள் பாதிக்கப்படவில்லை. இவற்றுக்குச் சிறிய அளவில் மாத்திரமே திருத்த வேலைகள் மேற்கொள்ளவேண்டி இருக்கும்.

2 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் தற்போது யாழ்ப்பாணத்தில் வசிக்கின்றனர்—

யாழ். ஆஸ் பத்திரி ஊழியர்கள் மீண்டும் வேலையில் ஈடுபடுத்தப்படுவர்.

யாழ்ப்பாணத்தில் மீளக் குடியேறுபவர்களின் தேவைகளை நிறைவு செய்யத் தேவையான பணத்தை வழங்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.

பாடசாலைகளும், அரச அலுவலகங்களும் மீண்டும் திறக்கப்படும். அரசாங்க ஊழியர்களுக்குச் சேரவேண்டிய சம்பளங்களும் வழங்கப் படும்.—என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## முகாம்களிலுள்ள சிறுவர்களின் போசாக்கு நிலை குறித்து மதிப்பீடு

### செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு நடத்துகிறது

சாவகச்சேரி, டிச. 10

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பராமரிப்பின் கீழ் உள்ள அகதி முகாம்களில் வாழும் சிறுவர்களின் போசாக்கு நிலைவரம்குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் வைத்தியர்குழு ஒன்று மதிப்பீடு செய்து வருகின்றது.

முகாம்களுக்கு நேரில் விஜயம் செய்து மதிப்பீட்டு வேலைகளை மேற்படி குழு மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் பராமரிப்பில் உள்ள முகாம்களில் [illegible] போரின் சுகாதார[illegible] பேணுவதற்காக மேற்படி முகாம்களில் பணியாற்றும் தொண்டர்களுக்கு விசேஷ பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

முகாம்களில் நிலவும் சுகாதாரம் சம்பந்தமான பிரச்சினைகளை சுகாதாரத் [illegible] வித்து வருகின்றனர். (ஐ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

*விற்பனைக்கு*

700X15 கொழும்பு றீபில் ரயர் ரியூப் இரண்டு விற்பனைக்குண்டு தொடர்பு:- பொ. பாலசுப்பிரமணியம் C/o றெஜிஸ்ரார் தமோதரம் பிள்ளை வீடு, கோவில் சந்தை, கரவெட்டி மத்தி. [39484[

புதிய சிறீராம் ஹொண்டா 1200 Watts ஜெனரேற்றர் விற்பனைக்கு உண்டு தொடர்பு:- சோதி அச்சகம், கச்சாய் வீதி,சாவகச்சேரி. [39612]

வீட்டு தளபாடங்கள் வேப்பம் அலுமாரி, கதிரைகள், மேசை இரண்டு லாச்சிகளுடன்,ரீ போய்,மற்றும் அம்மி, ஆட்டுக்கல்லு, திரிகை வேறு பொருள்களும் பார்வையிட்டு வாங்கலாம். மு. நாகராசா கணேசா பள்ளிக்கூட மேற்கு ஒழுங்கை,சரசாலை வடக்கு, சாவகச்சேரி. (39605)

*வியாழ மாற்றம்*

7-12-95 ராகு' கேது குரு மாற்ற எல்லா ராசி பலன்கள் எங்கும் கிடைக்கும் (நூலாசிரியர் சத்யா) அலுவலக. பாடசாலை உபகரணங்கள் தினசரிகள் விற்பனையாகின்றன. மொடேன் ஸ்ரோர்ஸ், நெல்லியடி. (39609)

*மருத்தெண்ணெய்*

Dr. அல்போன்ஸ் அத்தனாசியார் சில்லாலை மருத்தெண்ணெய் வகைகள் மட்டும் (கார்கார ஈசன் வீடு) கைதடி மத்தியில் பெற்றுக் கொள்ளலாம். (39611)

*கண்டெடுக்கப்பட்டது*

கண்டி வீதி, மீசாலையில் பெண்கள் கைக்கடிகாரம் ஒன்று 8-12-95 அன்று கண்டு எடுக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும். சி. வைத்திலிங்கம் C/o.Y.விஜயா வித்தியாலய வீதி, மீசாலை தெற்கு. (39610)

## போரை நிறுத்த குமரி அனந்தன் கோருவார்

இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி அங்கு நடைபெறும் போரை நிறுத்துமாறு பிரதமர் நரசிம்மராவிடம் தாம் வலியுறுத்தவுள்ளதாக தமிழக காங்கிரஸ் தலைவர் குமரி அனந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று சேலத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். [ஐ]

## கிளிநொச்சிக்கு

# இடம்பெயர்ந்தோருக்கு உதவ புனர்வாழ்வுக்கழகம் நடவடிக்கை

## குடியமர்த்த காணிகள் ஒதுக்கப்படுகின்றன

பூநகரி, டிச. 10

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சிக்கு வந்தவர்களை மீளக்குடியேற்றி,அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

யாழ். குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்தவர்களை குடியமர்த்துவதற்கான பணிகளை மேற்கொள்வதற்காக துறை சார்ந்த நிபுணர்கள் உள்ளடக்கிய விசேட நிர்வாக கட்டமைப்பை உருவாக்குவதற்கும் —

தேவைகளை பகுப்பாய்வு செய்வதற்கும் —

கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற அடிப்படை சமூகத் தேவைகளை அபிவிருத்தி செய்வதற்கும் —

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரும் வன்னி மாவட்டங்களின் உதவி அரசாங்க அதிபர்களும் இணைந்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது குடாநாட்டில் இருந்து வன்னியை நோக்கி சுமார் இரண்டுலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்களை குடியமர்த்துவதற்கு வேண்டிய குடிசைகள் அமைப்பதற்குரிய காணிகள் தெரிவு செய்யப்படுகின்றன.

## இடர் களைய பிரார்த்தனை

சாவகச்சேரி, டிச.10

பகைவரால் வரும் துபன்ங்களை, கஷ்டங்களைப் போக்கவும், அவற்றைத் தடுக்கவும் வேண்டி 45 நாள் பகல்—இரவு தொடர் பிராத்தனை சாவகச்சேரி பெரியமாவடி வித்தகம் நியைலத்தில் நடைபெற்று வருகிறது.

கடந்த மாதம் 27 ஆம் திகதி ஆரம்பித்த இத்தொடர் பிராத்தனையில் திருஞானசம்பந்த நாயனாரால் திருநெடுங்களத்தில் பாடப்பெற்ற இடர்களை பதிகம் இடைவிடாது தொடர்ந்து பாடப்படுகிறது.

இந்தப் பிரார்த்தனையில் பெரும் எண்ணிக்கையான சைவ அன்பர்கள்,ஆண்களும் பெண்களுமாக பகலும் இரவுமென மாறி மாறி பங்குபற்றுகிறார்கள். (அ)

## ஆஸ்பத்திரிக்கு குளிர்சாதன பெட்டி

சாவகச்சேரி. டிச, 10

மிருவிசுல் அரசினர் வைத்தியசாலைக்கு சுகாதார தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மண்ணெண்ணெய்யில் இயங்கும் குளிர்சாதனப்பெட்டியொன்று அண்மையில் சுகாதாரசேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்டது, (ஐ-31)

## மரக்கறி கொள்வனவுக்கு கிளிநொச்சி செல்கின்றனர்

பூநகரி, டிச. 10

வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் மரக்கறி விலைகள் உயர்ந்திருப்பதை அடுத்து வியாபாரிகள் சிலர் கிளிநொச்சி சென்று மரக்கறி வாங்கி வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தோட்டங்களுக்கு வியாபாரிகள் நேரடியாகச் சென்று மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்து சாவகச்சேரிக்குக் கொண்டு வருகின்றனர்.

தென்மராட்சி, வடமராட்சியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் காரணமாக கிளிநொச்சி, முழங்காவில், பூநகரி, கிராஞ்சி, ஜெயபுரம் ஆகிய இடங்களில் மரக்கறி வகைகள் பெருமளவு பயிரிடப்பட்ட போதிலும் மரக்கறி வகைகளின் விலை உயர்ந்துள்ளது என்று கூறப்படுகிறது.

## கிளிநொச்சிக்கு இடம் பெயர்ந்தோர்

# ம.எண்ணெய் வழங்குமாறு அரச அதிபரிடம் கோரிக்கை

பூநகரி, டிச. 10

பங்கீட்டு அட்டைக்கு மண்ணெண்ணெய் வழங்குமாறு கிளிநொச்சிக்கு இடம் பெயர்ந்த மக்கள் கிளிநொச்சி அரசாங்க அதிபருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் இருந்து ஆயிரக்கணக்கான குடும்பங்கள் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல்வேறு இடங்களிலும் இடம்பெயர்ந்து வசிக்கின்றனர்.

இடம் பெயர்ந்த குடும்பங்கள் சிறு சிறு குடிசைகள் அமைத்தும் முகாம்களிலும் வசித்து வருகின்றன.

இந்தக் குடும்பங்கள் மண்ணெண்ணெய் பெறமுடியாமல் பெரும் அவதிப்படுகின்றனர். ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 110 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. (இ-175)


## இடமாற்றம்

### மேர்வின்ஸ் (றபர்சீல்)

இல. 1, பெரிய கடை வீதி, யாழ். நகரில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் 11-12-95 முதல் நாதன் ஒட்டுத்தொழிற்சாலை கண்டி விதி, கொடிகாமம் என்ற முகவரியில் இயங்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.

(39604)

## தேடுகிறார்

ஒட்டுமடத்தைச் சேர்ந்த பெயின்ரர் ராஜேந்திரம் அவர்களை யாழ்ப்பாணம் மெயின்ஸீரீட் மோட்டார் சைக்கிள் மெக்கானிக் ஸ்ரீ தேடுகிறார்.

தொடர்பு:
C/o செ. பாலகிருஷ்ணன்
சட்டத்தரணி
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

(39608)


## அறவழி போராட்டக்குழு உதவி

கோவில் குடியிருப்பு, டிச. 10

இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த வலிகாமம் பகுதி மக்களுக்கு நுணாவிலில் இயங்கும் அறவழிப் போராட்டக் குழு பல்வேறு உதவிகளை வழங்கி உள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு வீட்டுப் பாவனைப் பொருள்களை அது வழங்கியுள்ளது. மலசல கூடங்களை அமைக்கவும் உதவியுள்ளது.

இடம்பெயர்ந்து மக்கள் வந்தவேளை சமைத்த உண[illegible] குழு வழங்கி உதவியது. (ஐ-3[illegible])

# யாழ். ஆக்கிரமிப்பினால் அடையப் போவது எதனை?

1995 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐந்தாம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகலுக்குச் சற்று முன்னதாக யாழ்ப்பாண நகரத்தில், ஸ்ரீலங்காவின் சிங்கக் கொடியை பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த ஏற்றி வைத்தார்.

வெளிநாடு ஒன்றின் மீது படையெடுப்பு நடத்தி, அதனைக் கைப்பற்றும் ஒரு நாடு தான் தனது கொடியை வெற்றி கொண்ட — ஆக்கிரமித்த— நாட்டின் தலைநகரில் அல்லது கேந்திரப் பிரதேசத்தில் ஏற்றுவது வழக்கம். மன்னர் காலத்திலும் இந்த வழக்கம் இருந்தது.

ஸ்ரீலங்காவின் சிங்கள அரசாங்கம் தமிழர்களைத் தனது பிரசைகள் என்றே கூறிவருகிறது. அவர்களை விடுவிப்பதற்காகவே 'ரிவிரச' இராணுவ நடவடிக்கையை நடத்தியதாகவும் கூறுகிறது. தமிழர்களைத் தனது பிரசைகள் என்று கூறிக்கொள்வதால் அரசாங்கத்தைப் பொறுத்தளவில் யாழ்ப்பாணம் உட்பட தமிழர் பிரதேசங்கள் யாவும் ஸ்ரீலங்காவின் பகுதிகளாகக் கருத்ப்பட வேண்டியவை.

அவ்வாறிருக்க, யாழ்ப்பாணத்துக்கு இராணுவம் வந்துவிட்டதால் அங்கு சிங்கக் கொடியை ஏற்றி விழாக் கொண்டாடி இருக்கிறது! யாழ்ப்பாணத்தை தமிழர் நாட்டின் பிரதான நகரம் என்று கருதியதால் தான் சந்திரிகா அங்கு கொடி ஏற்றி வைத்தாரா?

இராணுவ நடவடிக்கையின் வெற்றியை சிங்கள மக்களுக்கு பெரும் சாதனையாகக் காட்டி, அவர்களின் ஆதரவைத் திரட்டும் அரசியல் ஆதாய நோக்கம் மட்டுமே கொடி ஏற்றல் நிகழ்வுக்கு உண்டு என்று எண்ணலாகாது.

தமிழர்களின் பெருமைக்குரிய நகரான யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிவிட்டோம். அதேபோலத் தமிழ் மண் முழுவதையும் கைப்பற்றுவோம். அதற்குச் சிங்களவர் அணிதிரள வேண்டும் என்று சிங்களவர்களுக்கு அறைகூவல் விடுத்து. அவர்களுக்கு உணச்சியூட்டித் தமிழர்களுக்கு எதிராகத் தட்டி எழுப்புவதாகவும் கொடியேற்றலும் வெற்றி விழாக்களும் அமைகின்றன.

*பகைவர்கள் ஆகிவிட்டனர்*

இந்த நடவடிக்கை அரசு தமிழர்களைச் சிங்களவர்களின் பகைவர்களாகவும், தமிழர் பிரதேசங்களை அந்நிய நாடாகவும் கருதுவதற்கும் ஒப்பானதே.

செயலளவில் இத்தகைய ஒரு கருத்தை உருவாக்கிக் கொண்டு — சிங்களவர்களிடம் ஏற்கனவே நிறைந்து, உறைந்துள்ள தமிழர் இனவிரோதத்தை தட்டி எழுப்பிக் கொண்டு— ஐக்கிய இலங்கையைக் கட்டி எழுப்பப் போவதாகவும் சந்திரிகா தமது உரையில் தெரிவித்தார்.

## சதுரங்கம் — சாணன்

சந்திரிகாவின் நடவடிக்கைகள் சொல்வதொன்று, செய்வது வேறொன்று, விளைவொன்று, வினையொன்று என வெவ்வேறு கோணங்களிலும் துருவங்களிலும் காணப்படுகின்றன.

இந்த நிலைமை அவர் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமிக்க நினைத்து என்ன செய்கிறார், ஏது செய்கிறார் என்பது தெரியாத ஒரு குழப்ப நிலையை அவரிடம் தோற்றுவித்துள்ளதையும் காட்டுகிறது அல்லவா?

★ ★ ★ ★ ★

சந்திரிகாவும், அவரது படைகளும் ஆக்கிரமித்துள்ள யாழ்ப்பாணம், மக்கள் இல்லாத இடிந்த கட்டடங்களைக் கொண்ட பகுதி என்பது கடந்த வார அரசியல் நிகழ்வுகளின் ஒரு பக்கம்.

யாழ்ப்பாணம் ஈழத் தமிழர்களின் நாகரிகத்தின் பீடம் — சின்னம். எனவே அது வீழ்ந்து விட்டது என்பது அங்கு வாழும் மக்களின் மனங்களில் மட்டும் தாக்கத்தை துண்பத்தை ஏற்படுத்தியிருப்பதாகக் கருதக் கூடாது. இது முழு ஈழத் தமிழர் மனங்களிலும் உலகம் எங்கணும் வாழும் 9 கோடி தமிழ் மக்களின் இதயங்களையும் நெருடியுள்ளது. தமிழர் கையில் இருந்து யாழ்ப்பாணம் வீழ்ச்சி அடைந்ததை தமக்கு உண்டான ஓர் அவமதிப்பாக அவர்கள் கருதுகிறார்கள்.

முழுக்க முழுக்க சிங்களச் சிப்பாய்களையே கொண்ட இராணுவம், தமிழர்களின் தாயகப் பூமிக்குள் படை வகுத்து வந்தமை, ஏற்கனவே ஸ்ரீலங்கா அரசு மீதிருந்த வெறுப்பை அவர்களிடம் அதிகரித்திருக்கிறது.

அப்படியிருக்க, சிங்கள இராணுவமும், அரசும் தமது ஆக்கிரமிப்பை வெற்றி கொண்டாடுவது தங்களின் தன்மானத்துக்கு விடப்பட்ட சவாலாகவே தமிழர்கள் கருதுகின்றனர்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வழத்திற்கு வரமாட்டார்!

விடுதலைப் புலிகள் எமது அரசு முன்வைத்துள்ள அரசியல் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொண்டு —

கணிசமான அளவு ஆயுதங்களை ஒப்படைக்க முன் வருவார்களேயானால் —

அவர்களுடன் சமாதானப் பேச்சு நடத்துவது குறித்து நாம் ஆலோசிக்கலாம்.

யாழ்ப்பாணத்தை இராணுவம் ஆக்கிரமித்த பின்னர், அது சம்பந்தமான வெற்றிக் கொண்டாட்டங்களை நடத்திய பின்னர், தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு பிரலாபித்திருக்கிறார்.

தமது ஆயுதப்படையினரைக் கொண்டு யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்து விட்டதால் —

தாம் இராணுவ ரீதியில் மிகப் பலமான — மேலோங்கிய — நிலையில் நிற்பதாக நினைத்துக் கொண்டு சந்திரிகா இவ்வளவு இறுமாப்பாகப் பேசுகிறார். நிபந்தனை விதிக்கிறார்.

யாழ்ப்பாணம் மீதான இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த போது, தமிழ் மக்களை விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவிப்பதற்காகவே போர் நடத்தப்படுவதாகச் சொன்னார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடந்த செய்தியாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகளை முற்றாக அழித்துவிடும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை என்று கூறினார்.

இத்தகைய முன்னுக்கும் பின் முரன்பட்ட நிலைகளில் நின்று கொண்டு நாட்டில் சமாதானத்தையும், தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வையும் இவர் எவ்வாறு காணப்போகிறார் என்பது கோள்விக்குரியதாகிறது, கேலிக்கிடமாகவும் உள்ளது.

ஏப்ரலில் மோதல் தவிர்ப்பு முறிந்ததும் விடுதலைப் புலிகளை ஓரங்கட்டிவிட்டு, ஏனைய தமிழ்க் குழுக்களுடன் பேசி அரசியல் தீர்வைக் கொண்டு வரப்போவதாகக் கூறியவர் இந்தச் சந்திரிகாவே.

யாழ்ப்பாணத்துக்குப் படை அணிவகுத்து வந்ததை பெரும் வெற்றியாகக் கொண்டாடியதால், புலிகளைத்தான் பலவீனப்படுத்திவிட்டதாக சந்திரிகா நினைத்தால் அது இமாலயத் தவறாகும்.

ஆயுதங்களை அடையாளமாகக் கீழே வைக்குமாறு புலிகளிடம் கேட்பது வேறு.

சமாதானப் பேச்சு என்று தொடங்கினால் தனது தீர்வு யோசனையைப் புலிகள் பரிசீலனை செய்து இணக்கத்துக்கு வரவேண்டும் என்று கேட்பது வேறு.

தனது தீர்வுத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு, ஆயுதங்களை ஒப்படைத்தால் தான் பேசலாம் என்பது முற்றிலும் விஷமத்தனமானது.

விடுதலைப் புலிகளைப் புறக்கணித்துவிட்டு அரசியல் தீர்வு காணும் முந்திய நிலைப்பாட்டையே இது மீளப் பிரதிபலிக்கிறது.

சந்திரிகா தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழத்திற்கு வரமாட்டார் என்பதன் சமிக்ஞை இது!

விடுதலைப் புலிகளைப் புறக்கணித்துவிட்டு அரசியல் தீர்வு காணப்போவதாகக் கூறுவது இராணுவத் தீர்வை நாடுவது என்பதேயாகும்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் ஊடாக யாழ்ப்பாணத்துக்குத் தரைவழிப் பாதையைத் திறப்பதற்கான புதிய இராணுவ நடவடிக்கையை ஆரம்பிக்கப்போவதாக சந்திரிகா கூறியிருப்பது அதனை ஊர்ஜிதம் செய்கிறது.

### யாழ். பல்கலைக்கழக விவசாய பீடம் மகஜர்:

# அரசு மீது அழுத்தம் கொடுக்குமாறு உலக தலைவர்களிடம் கோரிக்கை!

## கிளின்டன், நெல்சன் மண்டேலாவுக்கும் அனுப்பப்பட்டன

சாவகச்சேரி, டிச. 10

தமிழர் மீது போர் தொடுத்திருக்கின்ற ஸ்ரீலங்கா அரசின் மீது நெருக்குதல்கள் கொடுக்குமாறு கோரி சர்வதேச சமூகத்துக்கு யாழ். பல்கலைக்கழக விவசாய பீடம் அறிக்கை ஒன்றை அனுப்பி உள்ளது.

பல்கலைக்கழக கல்வியாளர் சமூகம் கையொப்பமிட்டு அனுப்பியுள்ள இந்த அறிக்கையின் பிரதிகள் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ, அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டன், ஐரோப்பிய நாடாளுமன்றத் தலைவர், அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகர், தெற்காசியப் பிராந்திய கூட்டமைப்பு செயலக செயலர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையில் எட்டு அம்சக் கோரிக்கைகள் சர்வதேச சமூகத்திடம் முன்வைக்கப்பட்டுள்ளன. அவையாவன :-

★ ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது இராணுவ நடவடிக்கையை நிறுத்தி, ஆயுதப் படையினரை அவர்கள் ஆக்கிரமித்துள்ள பிரதேசங்களிலிருந்து விலக்கி, இடம்பெயர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களுக்கு மீளவகை செய்யுமாறு ஸ்ரீலங்கா அரசாங்கத்தை வலியுறுத்தி இசை வித்தல்.

★ போரை உடனடியாக நிறுத்தி அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்க வழிசமைத்தல்.

★ வடபகுதி மக்கள் மீது விதிக்கப்பட்ட பொருண்மியத் தடையை நீக்க இசையுமாறு அரசாங்கத்தைத் தூண்டுதல்.

★ அரசாங்கம் பொருண்மியத் தடையை நீக்கும் வரைக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகளை அரசு சாரா நிறுவனங்கள் நேரடியாக வழங்கும் முறையினை ஏற்படுத்தல் —

ஏனெனில் தொடர்ந்து பொருண்மியத் தடைகளை விதித்து வைத்திருக்கும் ஒரு அரசாங்கம் நிவாரண உதவிகளை நீதியாகப் பகிர்ந்து அளிக்கும் என எதிர்பார்க்க முடியாது.

★ வன்னிப் பகுதியில் நிரந்தரமாகக் குடியேற விரும்பும் மக்களுக்கு உதவி வழங்குதல்.

★ உள்நாட்டு வெளிநாட்டு செய்தி நிறுவனங்களும், பிற பார்வையாளரும் வட இலங்கை சென்று இன்றைய நிலைமைகளை நேரில் கண்டு பக்கம் சாராது மதிப்பீடு செய்ய அனுமதிக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுத்தல்.

★ வடபகுதி மக்கள் தம் கல்வி செயற்பாடுகளையும் பிறவற்றையும் மீளத் தொடங்குவதற்கும்— தமது சொந்த நாட்டிலேயே நிரந்தர அகதிகளாகும் நிலையை ஒழித்து தன்மானத்துடனும், கௌரவத்துடனும் இயல்பாய் வாழ்வதற்கு வேண்டிய இயலுமான அனைத்து உதவிகளையும் பெற்றுத் தருதல்.

★ பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பெருநிலப்பரப்புக்கு— பாதுகாப்பான இடங்களுச்குச் செல்வதற்கு இன்றுள்ள ஒரே பாதை யாழ்ப்பாணக் கடலேரி. அதனூடான பயணம் இன்று தடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையை விலக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுத்தல்.

சர்வதேச சமூகத்துக்கு அனுப்பப்பட்ட இந்த அறிக்கையில் பேராசிரியர் கே. குணரட்ணம், பேராசிரியர் எஸ். வி. பரமேஸ்வரன், பேராசிரியர் எஸ். மகேஸ்வரன். கலாநிதி ஏ. நவட்ணராஜா, கலாநிதி எஸ். மோகனதாஸ், திரு. எஸ். ராஜதுரை, திருமதி ஆர். பரராஜசிங்கம், பேராசிரியர் ஏ. சண்முகதாஸ், திரு ஆர், விஜயரட்ணம், கலாநிதி எஸ். நச்சினார்க்கினியன், கலாநிதி கே. சிவபாலன், திரு. ஆர். நந்தகுமாரன், செல்வி எஸ். அருளானந்தம், செல்வி கே. திருநாவுக்கரசு, திரு. எஸ். தேவதாஸன், திரு. கே. பரமேஸ்வரன், பேராசிரியர் பி. பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் என். பாலகிருஸ்ணன்,

( 6ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் தீர்வு யோசனைக்கு எதிராக தென் பகுதியில் கருத்தரங்குகள்

## எதிரணியினர் நடத்துகின்றனர்

கொழும்பு, டிச. 10

இனப்பிரச்சினைக்கு அரசு முன்வைத்துள்ள தீர்வு யோசனைக்கு ஆதரவாகவும், எதிர்ப்பு தெரிவித்தும் தெற்கில் போட்டிக் கருத்தரங்குகளை எதிரணியினரும், அரச ஆதரவாளர்களும் நடத்தி வருகின்றனர்.

அரசின் தீர்வு யோசனைக்கு கூடுதலாக எதிர்ப்புக் கிளம்பியுள்ள அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி ஆகிய மாகாணங்களில் எதிரணியினர் ஏற்பாடு செய்யும் கருத்தரங்குகள், கூட்டங்களில் ஏராளமான மக்கள் கலந்து கொள்வதாகவும்—

அமைச்சர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஏற்பாடு செய்யும் கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளில் குறைந்த எண்ணிக்கையான மக்களே கலந்து கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

# பட்டினங்களாக மாறும் வன்னிக் கிராமங்கள்

சாவகச்சேரி, டிச. 10

யாழ் குடாநாட்டு மக்கள் வன்னிக்கு இடம்பெயர்ந்து வருவதை அடுத்து அங்குள்ள கிராமங்கள் மற்றும் குடியேற்றப் பகுதிகள் பட்டினங்களாக மாறி வருகின்றன.

குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் பெரும்பாலானோர் ஆங்காங்கே சிறிய நகரப் பகுதிகளில் குடிசைகள், கொட்டகைகளை அமைத்து தமது இயல்பு வாழ்க்கையை ஆரம்பித்துள்ளனர்.

சிறிய கொட்டகைகளில் தேநீர்க் கடைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் பெரும் எண்ணிக்கையில் அமைக்கப்பட்டுள்ளன.

குடாநாட்டில் தற்போது பொருள்களுக்கு உள்ள விலையுடன் ஒப்பிடும்போது வன்னியில் பொருள்களின் விலை மிகக் குறைவாகவே உள்ளது.

சீனி கிலோ 37 ரூபாவாகவும், நாட்டரிசி கிலோ 22 ரூபாவாகவும், முட்டை ஐந்து ரூபாவாகவும், றின்சோ பக்கெட் 5 ரூபா 50 சதமாகவும், ஆட்டிறைச்சி கிலோ 75 ரூபாவாகவும் விற்பனையாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தவிர, இடம்பெயர்ந்த மக்களுக்கென அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் வழங்கும் நிவாரணப் பொருள்களை ஓர் ஒழுங்கு முறையின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இடம் பெயர்ந்தோருக்கு வழங்கி வருகின்றது.

(உ-80)

# நோயாளருடன் உறங்கும் கட்டாக்காலி நாய்கள்!

வடமராட்சி, டிச. 10

வீதிகளில், சந்தைகளில் மட்டும்தான் கட்டாக்காலி நாய்களின் தொல்லை இருப்பதுண்டு. சில சந்தர்ப்பங்களில் நோயாளர்களின் மிகுதி உணவுக்காக நாய்கள் ஆஸ்பத்திரிகளில் கூடுவதும் உண்டு.

ஆனால் மந்திகையில் உள்ள போதனா வைத்தியசாலையிலும், அரசினர் ஆதார வைத்தியசாலையிலும் நோயாளர்களைக் கட்டாக்காலி நாய்கள் தொல்லை செய்கின்றன. அவர்களின் படுக்கைகளில் நாய்களும் போய்ப் படுத்துவிடுகின்றன.

இரண்டு வைத்தியசாலை வார்டுகளின் விறாந்தைகளிலும் இரவு வேளைகளில் நோயாளர்கள் பாயில் படுத்து உறங்கும்போது—

வைத்தியசாலை வளவுகளில் நடமாடும் கட்டாக்காலி நாய்கள் நோயாளர்கள் நித்திரையானதும் அவர்களது படுக்கைகளில் உல்லாசமாகச் சென்று உறங்குகின்றன.

ஆழ்ந்த உறக்கத்திலிருக்கும் நோயாளர்கள் திடீரென விழித்துப்பார்த்தால் அவர்களுடன் படுக்கையில் கட்டாக்காலி நாய்கள் உறங்குவதைக் கண்டு முதலில் திடுக்கிடுகின்றனர்; பின்னர் துரத்துகின்றனர்.

கட்டாக்காலி நாய்களின் தொல்லையால் இவ்வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்கள் பெரிதும் அவதியுறுகின்றனர்.

(அ-137)

## யாழ். ஆக்கிரமிப்பினால்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது கடந்த வார அரசியல் நிகழ்வுகளின் மறு பக்கம் — எனவே —

சிங்களவர் ஒரு தேசம் என்ற வகையிலும், தமிழர் தாயகம் வேறு நாடு என்ற வகையிலும், தமிழருக்கு எதிராகக் கிளர்ந்து எழும் விதத்தில சிங்களவர்கள் தட்டி எழுப்பப்படும் சூழ் நிலையில் —

தமிழர்கள் தமது மண் ஆக்கிரமிக்கப்பட்டது என்ற ஆத்திரத்தினாலும், மனவேதனையாலும், ஆக்கிரமிப்புக்கு எதிராக வீறு கொண்டு எழும் நிலை உருவாக்கப்பட்டுள்ளதுமான பின்னணியில் —

ஒரே நாடு, சமாதானம் எப்படிச் சாத்தியமாகும்?

★ ★ ★ ★ ★

1956 ஆம் ஆண்டில் சந்திரிகாவின் தந்தை பண்டாரநாயக்கா தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது இருந்த சிங்களவர் — தமிழர் அரசியல் உறவு விரிசலைவிட— அல்லது பகைமையைவிட —

1983 ஆம் ஆண்டில் சிங்கள அரசும், குண்டர்களும், படைகளும் முக்கூட்டுச் சேர்ந்து நடத்திய தமிழர் இனப்படுகொலை வேளையின்போது இருந்த சிங்களவர் — தமிழர் அரசியல் விரிசலை விட — அல்லது பகைமையை விட —

தமிழர்களின் வரலாற்றுச் சிறப்பும், பாரம்பரியமும் மிக்க யாழ்ப்பாணத்தைச் சிங்களப் படைகள் ஆக்கிரமித்து வெற்றி கொண்டாடும் இப்போது சிங்களவர் — தமிழர் அரசியல் விரிசல்—அல்லது பகைமை பல நூறு மடங்கு அதிகரித்துள்ளது.

முந்திய நிகழ்வுகள், நடவடிக்கைகளைவிட யாழ்ப்பாண ஆக்கிரமிப்பும், அது குறித்த வெற்றி விழாக்களும் தமிழர்களை மிகவும் மனவேதனைக்கு ஆளாக்கி மிகவும் புண்படுத்தி உள்ளன.

தமிழர்களின் தன்மானத்துக்குச் சவால்விட்ட பின்னர், அவர்களின் பெருமையின் சின்னத்தைச் சின்னாபின்னப் படுத்திய பின்னர், சிதைத்த பின்னர் —

தமிழ்ர் — சிங்களவர் அரசியல் உறவின் விரிசலை நிவிர்த்தி செய்து சமாதானத்தைக் கொண்டு வருவது சாத்தியம் என்று சந்திரிகா எண்ணுவது அர்த்தமற்றது. வெறும் கற்பனையே.

தமிழர்களுடன் சமாதானம் செய்து கொள்வதானால் அவர் முதலில் தமிழர் தாயகத்தில் இருந்து ஆயுதப் படைகளை முற்றாக வாபஸ் பெற வேண்டும். தமிழர்கள் வைக்கக் கூடிய இந்த நிபந்தனையை அவர் ஏற்பாரா?

இயாலாவிடில் அவரால் தமிழர் விவகாரத்துக்கு அரசியல் தீர்வும் காண முடியாது; இராணுவத் தீர்வும் காண முடியாது.

எல்லோரும் ஏறி விழுந்த குதிரையில் சக்கடத்தாரும் ஏறி விழுந்த கதையாகவே முடியும்! பாவம்!!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ்ஸிலிருந்து தப்பி ஓட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த ஒரு மாதத்துக்கு முன் சந்திவெளி, வந்தாறு மூலை ஆகிய இடங்களில் சில சம்பவங்கள் இடம்பெற்றன.

வந்தாறு மூலை சந்திவெளியில் 20 வீடுகள் கொளுத்தப்பட்டன. மூவர் கொல்லப்பட்டனர்.

இதேபோன்று செங்கலடியில் நடைபெற்ற சம்பவத்தில் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

ஆனால் இவற்றை விட மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் நடந்த இச்சம்பவத்தில் தான் கூடுதலானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் இடையில் அகப்பட்டே இவர்கள் கொல்லப்பட்டனர் என்பதே படையினர் தரப்பு வாதம் ஆகும்.

கொல்லப்பட்டவர்கள் பயணம் செய்த பஸ்கள் அதிரடிப் படை முகாமுக்கு கொஞ்சம் தூரத்திலேயே நிறுத்தப்பட்டிருந்ததாக எனக்கு தகவல் கிடைத்திருந்தது.

அங்கிருந்து வாகனத்தை விட்டு [illegible] தப்பி ஓட முயன்றபோது அவர்கள் சுடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படுகொலைக்கு அந்த முகாமில் இருந்த அதிரடிப் படையினரே முழுப் பொறுப்பு என்றே எனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## 30 தமிழரின்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
நிலையில் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற இத்தாக்குதல் சம்பவத்தின் பின்னர் அப்பகுதியூடாக பஸ் மற்றும் வாகனங்களில் பயணம் செய்த முப்பது அப்பாவிப் பொதுமக்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தாக்குதலில் கொல்லப்பட்ட சுமார் நாற்பது அதிரடிப் படையினரின் சடலங்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு உடனடியாக திருப்பி ஒப்படைக்கப்பட்டன

ஆனால் உயிரிழந்த முப்பது பொது மக்களின் சடலங்களில் 17 சடலங்கள் மட்டுமே இரண்டு நாட்கள் கழிந்து மிகவும் பழுதடைந்த நிலையில் — நேற்று முன்தினம் மாலை 4 மணிக்குப் பின்னர் — பலரும் மேற்கொண்ட கடும் முயற்சிக்குப் பிறகு — ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன என்று தகவல்கள் தெரிந்தன. (உ-ஐ)

## இலங்கை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்பைத் தெரிவிக்கப் போவதாக வை. கோபால எச்சரித்துள்ளார்.

சென்னையில் நடைபெறவுள்ள இவ்விளையாட்டு விழாவில் சார்க் நாடுகளைச் சேர்ந்த 280 விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

மிகவும் கோலாகலமான முறையில் நடைபெறவுள்ள இந்த விளையாட்டு விழாவை இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் ஆரம்பித்து வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், மாலைதீவு ஆகிய நாடுகள் ''சார்க்'' அமைப்பில் உள்ளன. (ஐ-6)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஜெயராம் அற்புதமலர்

(பூவார்)

219, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி ஜெயராம் அற்புதமலர் (பூவார்) 29 - 11 - 95 அன்று சென்னையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசையா (கொக்கர்) தம்பதிகளின் ஒரே மகளும், நாகலிங்கம் ஜெயராமின் அன்பு மனைவியும், பொன்னையா ஜெயமலர் (பிரான்ஸ்), கமலநாதன் ஜெயராணி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயகாந்தன், ஜெயசிறீதரன் (ஜெர்மனி), ஜெயசீலன் (கனடா), ஜெயபாலன் (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தாயாரும், பொன்னையா (பிரான்ஸ்), கமலநாதன் (பிரான்ஸ்), லலிதாம்பிகை (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும், செல்வராசா, திருமதி சறோஜினி திருநாவுக்கரசு, குணலிங்கம், திவ்வியம் (ஓய்வுபெற்ற நீர்ப்பாசன இலாகா தொழில் நுட்ப உத்தியோகத்தர்), திருமதி நேசமணி சிவானந்தன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் சென்னையில் நடைபெற்றன.

தகவல்:
திருமதி நேசமணி சிவானந்தன்
சங்கத்தானை,
சாவகச்சேரி, (39613)

## பண்டாரி செல்லர்

(முறிவு, நோவு வைத்தியர்)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வராத்துப்பளையில் இடம்பெயர்ந்து வசிப்பவருமான முறிவு நோவு வைத்தியர் பண்டாரி செல்லர் அவர்கள் 09 - 12 - 95 காலமானார். இவர் காலஞ்சென்ற சீதேவியின் அன்புக் கணவரும், வீரசிங்கம், பரமேஸ்வரி, தங்கவடிவேல் (பிரான்ஸ்), கமலாதேவி, பன்னீர்ச்செல்வம் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசதுரை, லீலாவதி, நடராஜா, சாந்தராணி, சந்திராதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், பகீரதன், இளங்கோவன், முகுந்தன், யோகேஸ்வரி, சுதேஸ்வரி, கெங்காதரன் (பிரான்ஸ்), சிறிதரன் (பிரான்ஸ்), இராசமனோகரன், முரளிதரன், அகிலன் (பிரான்ஸ்), ஒலிவியோ (பிரான்ஸ்), கமல்ராஜ், இளங்கீரன், கோபிநாத், கோகுலன், மாதங்கி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று மாலை வராத்துப்பளையிலுள்ள சின்னத்தம்பி ஆசிரியரின் ''எழில் இல்லம்'' இல்லத்தில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பன்னீர்ச்செல்வம்
(மகன்)
(39485)

## திருமதி
## குணரெட்ணம் கமலாம்பிகை

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணரெட்ணம் கமலாம்பிகை நேற்று (09-12-95) சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கணபதிப்பிள்ளையின் மகளும், திரு. திருமதி தம்பையாவின் மருமகளும், குணரெட்ணத்தின் (ஓய்வுபெற்ற தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், ஈஸ்வரி, பரமேஸ்வரி, லலிதாம்பாள் (ஆசிரியை கொக்குவில் நாமகள் வித்தியாலயம்), முரளிதரன் (லண்டன்), ஆகியோரின் அன்புத் தாயாரும், கதிரவேலு (கொழும்பு), நல்லதம்பி (சுவிஸ்), நாகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயசீலன் (லண்டன்), சுமதி (இணைந்த பல்கலைக் கழகம கல்லூரி, வவுனியா), அரவிந்தன் (மருத்துவ பீடம், யாழ்ப்பாணம்), சுதமதி (நுண்கலைப் பீடம், யாழ்ப்பாணம்), புராதனி, கல்யாணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கந்தசாமி, காலஞ்சென்ற திருமதி காமாட்சிசுந்தரம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) திருமதி அப்பாத்துரை (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10-12-95) முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் தற்காலிக வசிப்பிட இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. நாகேஸ்வரன்
(மருமகன்)
ந. அரவிந்தன்
[பேரன்]

முகவரி:
மதி கல்வி நிலையம்,
அத்துழு அம்மன் கோவிலடி,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. [39486]

## வன்னியில் புனர்வாழ்வுக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மாக இடம்பெயர்ந்து கொண்டிருக்கும் நிலையில் —

அவர்களின் வாழ்வுக்கான ஆதாரங்களைத் துரிதமாக உருவாக்கிக் கொடுக்கும் வேலைத்திட்டங்களை விடுதலைப் புலிகள் வன்னியில் ஆரம்பித்துள்ளனர்.

தமிழீழத் தேசியத் தலைவரின் சிறப்புப் பணிப்புரையின் கீழ் சம்பந்தப்பட்ட துறைசார் பிரிவுகளின் பிரதான பொறுப்பாளர்களையும், வன்னிப் பரப்பின் மாவட்ட, கோட்ட பொறுப்பாளர்களையும் ஒன்று கூட்டிய அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் பூர்வாங்க வேலைத்திட்டங்கள் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்றை நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடத்தினார்.

அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன்பாலசிங்கம், திரு. வே. பாலகுமாரன் ஆகியோருடன் சம்பந்தப்பட்ட துறைகளில் பணியாற்றும் நூற்றுக் கணக்கான போராளிகள் கலந்து கொண்ட இந்த முக்கிய ஒன்றுகூடலின்போது மேற்படி வேலைத் திட்டங்களைச் செயற்படுத்தும் சாத்தியப்பாடுகள் தீவிரமாக ஆராயப்பட்டு நடைமுறைப்படுத்தும் வழி முறைகள் தொடர்பான முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டதுடன் இடம் பெயரும் மக்களுக்கான புனர்வாழ்வுச் செயற்பாடுகளும் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தமிழீழ நிர்வாகசேவை, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தமிழீழ சமூக மேம்பாட்டுப்பிரிவு, விடுதலைப்புலிகளின் மருத்துவத்துறை ஆகியவற்றின் பணிகளை ஒன்றிணைத்துத் தயாரிக்கப்பட்ட புனர்வாழ்வுத் திட்டங்களின் செயற்பாடுகள் நேற்றுமுதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

### தமிழீழ நிர்வாக சேவை

இதனடிப்படையில் —

இடம் பெயரும் மக்களின் பிரயாண வசதிகளை தமிழீழ நிர்வாக சேவை கவனிக்கின்றது.

கிளாலிக் கரையிலிருந்து படகுச்சேவை உட்பட வன்னிப்பிராந்தியத்தின் எந்த மூலைக்கும் மக்களையும், அவர்கள் எடுத்து வரும் அத்தனை பொருள்களையும், உபகரணங்களையும் இலவசமாக எடுத்துச் செல்லும் சேவையையும் பயண வேளையில் இலவச உணவு, தேனீர் வசதிகளையும் அது வழங்குகின்றது.

அத்தோடு இடம்பெயர்ந்து வந்து ஆங்காங்கேபரவலாகத் தங்கியிருக்கும் மக்களை கிராம சேவையாளர்கள் மூலமாக இனம் கண்டு. நிவாரணப் பொருள்களை உரிய நேரத்தில் வழங்கும் ஏற்பாடுகளோடு —

அத்தியாவசிய மற்றும் பற்றாக்குறையான பொருள்கள் விநியோகிப்பதில் இடம் பெயரும் மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை இடம் பெயரும் மக்களின் வசதிகருதி, கிளிநொச்சி வைத்திய சாலையில் இரண்டு புதிய — விசாலமான — கட்டடங்கள் தமிழீழ நிர்வாக சேவையால் துரிதமாகக் கட்டப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட வைத்திய சாலைகள் சிலவற்றில் புதிய கட்டடங்களை நிர்மாணிக்கும் ஆயத்தங்களும் செய்யப்படுகின்றன.

### புனர்வாழ்வுக் கழகம்

இடம்பெயரும் மக்களுக்கான உடனடித் தங்குமிட பராமரிப்பு வசதிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செய்கின்றது.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நலன்புரி நிலையங்கள் அமைத்து அரச சார்பற்ற நிறுவனங்கள், பொது அமைப்புகள், நலன்விரும்பிகள் ஆகியோரது உதவியுடன் இடம்பெயர்ந்தோர் தங்ககங்களில் — சமைத்த உணவு வழங்கல், குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கல், மரணக் கொடுப்பனவுகள், பூப்பெய்தும் மகளிர் மற்றும் பிரசவ தாய்மார்களுக்கான சுகாதார ஏனைய வசதிகளை ஏற்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டுள்ளது.

மேலும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களான 'ஒக்ஸ்பாம்', 'கெயர்', 'றெட்பான' 'போரூட்' போன்ற அமைப்புக்கள் மற்றும் வர்த்தக சங்கங்கள், கூட்டுறவு அமைப்புக்கள், உள்ளூர் நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் —

தெரிவு செய்யப்பட்ட காணிகளில் இடம்பெயர்ந்தவர்களைக் குடியமர்த்துவதற்கான நிர்மாண வேலைகளிலும் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டுள்ளது,

### நிதித்துறை பொருண்மியப் பிரிவு

இதேவேளை விடுதலைப் புலிகளின் நிதித் துறையின் ஒத்தாசையுடன், இடம்பெயரும் மக்களின் தொழில் வசதிகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஏற்பாடு செய்கிறது:

குறுங்கால — நெடுங்கால திட்டங்களின் அடிப்படையில் பயிர்ச் செய்கைக்கான காணிகளை வழங்கல், விலங்கு வேளாண்மைக்கான கால்நடைகளை வழங்கல், மீன்பிடித் தொழிலாளருக்கு உரிய இடங்களில் குடியிருப்பு மற்றும் பொருளாதார வசதிகளை வழங்கல் சிறுகைத் தொழில் முயற்சிகளிற்கான ஊக்குவிப்புக்களை அளித்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குடாநாட்டிலுள்ள தொழிலதிபர்கள் தமது நிறுவனங்களை தொடர்ந்து இயங்குவதற்கு வாய்ப்பான இடங்களை வழங்குவதுடன் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அவற்றிற்குரிய உதவிகளையும் உத்தரவாதங்களையும் அளிக்கின்றது.

### மருத்துவப் பிரிவு

சுகாதார ஒழுங்குகளை விடுதலைப் புலிகளின் மருத்துவத்துறை கவனிக்கின்றது. இடம்பெயரும் வைத்தியர்களுக்கான இருப்பிட வசதிகளைச் செய்தல், பற்றாக்குறையான இடங்களுக்கு வைத்தியர்களை நியமித்தல், இடம்மாறும் தனியார் மருத்துவ மனைகளை நிறுவுவதற்கு ஏற்ற இட வசதிகளை ஒழுங்கு செய்தல், சமூக சுகாதார சேவைகள், நோய்த்தடுப்பு மருந்துகள் வழங்கல் வைத்தியசாலைகளில் நோயாளர்களைக் கவனித்தல், சுற்றாடலை சுத்திகரித்தல் போன்ற செயற்பாடுகளிலும் மருத்துவத்துறை ஈடுபட்டுள்ளது.

## புலிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தோற்றுவித்துள்ளதாகவும் —

வலிகாமம் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு தாம் எந்நேரமும் உள்ளாகலாம் என்ற அச்சம் இராணுவத்தினரிடையே குடிகொள்ள ஆரம்பித்திருப்பதாகவும் —

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரிப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வலிகாமம் பகுதியில் விடுதலைப் புலிகள் வைத்துள்ள மிதிவெடிகளையும் கண்ணி வெடிகளையும் அகற்றுவது படையிருக்கு மிகவும் சிக்கலாக உள்ளதாகவும் —

இவற்றைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபடும் இராணுவத்தினர் தொடர்ச்சியாக இழப்புக்களைச் சந்தித்து வருவதாகவும் —

அச்செய்தியில் மேலும் கூறப்பட்டது. (உ-7)

## அரசு...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)
திரு. அன்ரனிராஜன், கலா [illegible] ளனர். (ஐ-7)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் [illegible] அவர்களது தற்காலிகப் பணிமனையில் 10-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org